அளிக்கப்படவில்லை என்று அவர்கள் திரும்பத் திரும்ப சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் அரசுக்கும் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த உதவித் தொகையை அளிப்பதற்கு அரசு ஏதாவது வழிவகை செய்யுமா? காரணம் அமைச்சர் திரு. இராதா அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக்கான பற்றும் பரிவும் உடையவர்கள். காரணம் அவர்களும் அதிலே ஈடுபட்டவர்கள். எனவே இப் பிரச்சினையில் அரசு அனுதாபத்தோடு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞர். இங்கே கேட்கப்பட்டிருக்கின்ற கேள்வி மொழிப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்களுக்கு வீடுகள் அளிக்கப்படுமா என்பது. உதவித்தொகை அளிப்பது என்பது பற்றி வேறு ஒரு நிலையிலே தான் சிந்திக்கவேண்டிய ஒன்றாகும். ஆனாலும் அந்தக் கேள்வியையும் போட்டு வைக்கலாம் என்ற முறையிலே கேட்டிருக்கின்றார். ஆகவே பதிலைக் கொடுத்து வைக்கலாம் என்ற முறையிலே நானும் பதில் சொல்கிறேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: துணைத் தலைவர் அவர்களே, இப்போது புதிய மாவட்டத் தலைநகர்கள் எல்லாம் அறிவிக்கப் பட்டிருக்கின்றன. எனவே அந்தப் பகுதிகளில் வீட்டு வசதிகள் குறைவாக இருக்கின்ற நிலைமைகளை அறிந்து அப்படிப்பட்ட பகுதிகளில் வீட்டுவசதியினை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதியினைப் பொறுத்தவரையில் எந்தெந்தப் பகுதிகளில் தேவை என்பதை அறிய சர்வே நடத்தப்படுகின்றது. அப்படிப்பட்ட சர்வேக்களில் புதிதாக அறிவிக்கப்பட்ட மாவட்டத் தலைநகரங்களுக்கு முதன்மைக் கொடுக்கப்பட்டு அந்த இடங்களில் இப்போதிருந்தே தேவையான வசதிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

செங்கற்பட்டு வேதாசலம் நகரில் நகர்மன்றம் கட்ட ஒதுக்கப்பட்ட இடம்.

16—(* வினா எண். 17347) திரு. சி. கணேசன்: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரில் வேதாசலம் நகர் பகுதியில் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தால், நகர மக்களுக்கு டவுன்ஹால் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தை இப்போது ஸ்டேட் பேங்க் நிறுவனத்துக்கு விற்று இருப்பது அரசுக்குத் தெரியுமா?

1984 பிப்ரவரி 17]

(ஆ) ஆம் எனில், கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் வேறு இடத்தில் டவுன்ஹால் கட்டிக் கொடுக்க முன்வருமா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு நகரில் இப்பொழுது இருக்கிற அந்த இடம் பாரத ஸ்டேட் வங்கிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு வேதாசலம் நகரில் நகர்மன்றம் அமைக்க வேறு தகுதியான இடமில்லை. அளகேசன் நகர் மற்றும் அண்ணா நகரில் சங்கத்திற்குச் சொந்தமான பொதுக் காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 76 சென்ட் 201 சதுர அடி பரப்பளவு உள்ள மனைகள் உள்ளன. இந்த மனைகளில் நகர் மன்றம் கட்டித்தருகிற அளவுக்குச் சங்கத்திடம் போதிய நிதி வசதி இல்லை.

தஞ்சையிலிருந்த வீட்டுவசதி வாரியத்தின் நிர்வாக அலுவலகம்

17—(*வினா எண் 19191) திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் இருந்த வீட்டுவசதி வாரியத்தின் நிர்வாக அலுவலகம் திருச்சி பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் தஞ்சையில் மீண்டும் பிரிவு அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) மற்றும் (ஆ) தஞ்சையிலிருந்த வீட்டுவசதி அலுவலகம் வேலையின்மை காரணமாக மாற்றப்பட்டிருக்கிறது. வேலைகள் வருகிற நேரத்தில் நிச்சயமாக அந்த அலுவலகம் செயல்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: இப்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் மதுரை வீட்டு வசதிப் பிரிவோடும் தஞ்சை திருச்சியோடும் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. புதிதாக மாவட்டத் தலைநகரங்களை மாற்ற வசதிகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்ற நேரத்திலே, தஞ்சையிலே மீண்டும் அந்த அலுவலகத்தை ஏற்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த வரை எங்கு பணிகள் இருக்கின்றனவோ அந்தப் பணிகளுக்கு ஏற்ப அலுவலகங்கள் அமைப்பது என்பதை முறையாக வைத்